بسم اللہ الرحمن الرحیم        نحمدہ ونصلی علیٰ رسولہ الکریم        وعلیٰ عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللَّهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 29

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

24 துல்கஅதா 1441 ஹிஜ்ரி கமரி 16 வஃபா 1399 ஹிஜ்ரி ஷம்ஸி
16 ஜூலை 2020

**அல்லாஹ்வின் கட்டளை**

وَلَيْسَتِ التَّوْبَةُ لِلَّذِيْنَ يَعْمَلُوْنَ السَّيِّاٰتِ ۚ حَتّٰٓى اِذَا حَضَرَ اَحَدَهُمُ الْمَوْتُ قَالَ اِنِّىْ تُبْتُ الْـٰٔنَ وَلَا الَّذِيْنَ يَمُوْتُوْنَ وَهُمْ كُفَّارٌ ؕ

பாவங்களைச் செய்து கொண்டே இருப்பவர்களுள் ஒருவருக்கு, மரண நேரம் வரும்போது நான் நிச்சயமாக இப்போது பாவமன்னிப்புத் தேடுகிறேன் என்று கூறுபவர்களுக்கும், நிராகரிப்பின் நிலையிலேயே இறப்பவர்களுக்கும் பாவ மன்னிப்பு(ப் பெறும் உரிமை) கிடையாது. (4:19)

**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**இதுவொரு உறுதியான விஷயமாகும். அதாவது எவர் ஒருவர் தன்னிடத்தில் மற்றவர்களுக்காக அனுதாபத்தின் உணர்வுகளை கொண்டிருப்பதில்லையோ அவர் கருமி ஆவார். நான் சிறந்ததும் மற்றும் நன்மைக்கான ஒரு வழியைப் பார்த்தால், அதைப் பற்றி மக்களை அழைத்துக் கூறுவது எனது கடமையாகும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

## அமைப்பின் மகத்துவம் மற்றும் கண்ணியத்தை கருத்தில் கொள்ளுங்கள்

எவர் ஒருவர் தமது அயல்வாசியிடம் தனது நல்லொழுக்கத்தில் மாற்றத்தை வெளிப்படுத்திக் காட்டுவாரோ அதாவது முன்பு அவர் எப்படி இருந்தார் மேலும் தற்போது எப்படி இருக்கின்றார் என்பதை வெளிப்படுத்திக் காட்டுவாரோ அது அவருக்கு ஓர் அற்புதமாகும். அதன் தாக்கம் அயல்வாசி மீது மிகப்பெரிய அளவில் ஏற்படுகின்றது.

நமது ஜமாஅத் மீது, என்ன முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பது எங்களுக்குத் தெரியாது என்று ஆட்சேபனை செய்கின்றனர். மேலும் நாம் பொய் கூறுவதில் மூழ்கியுள்ளோம் என்று பழி சுமத்துகின்றனர்.

இது அவர்களுக்கு வெட்கத்திற்கு காரணமாக இருக்கவில்லையா? அதாவது எவ்வாறு ஒரு நல்ல மகன் தனது தந்தையின் நற்பெயரை வெளிப்படுத்துகின்றானோ அதுபோன்று மனிதன் மிகச்சிறந்ததாக கருதி இந்த அமைப்பில் இணைந்தான். ஏனென்றால் பைஅத் செய்யக்கூடியவர் மகன் என்ற கட்டளையின் கீழ் வருகின்றார். எனவேதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய மனைவிமார்களை நம்பிக்கையாளர்களுக்கு தாய் என்று கூறப்படுகிறது. இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களின் தந்தையாக திகழ்கின்றார்கள்.

பௌதீக தந்தையானவர் பூமியில் வருவதற்கு காரணியாக அமைகின்றார். ஆனால் ஆன்மீக தந்தை வானத்திற்கு அழைத்துச் கொண்டு செல்கின்றார்.

ஏதாவதொரு மகன் தனது தந்தைக்கு அவப்பெயர் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்களா? மேலும் மது அருந்த வேண்டும். அல்லது தந்தையின் பெயர் அவப்பெயருக்கு ஆளாகும் வகையில் அத்தகைய தீய செயலை செய்ய வேண்டும் என்றும் விரும்புவீர்களா? இத்தகைய செயலை விரும்புகின்ற எவரும் இருக்க மாட்டார் என்பதை நான் அறிவேன். ஆனால் அவரது மகன் அவ்வாறு செய்வான் என்றால் பிறகு படைப்பினங்களின் நாவுகள் மௌனமாக இருப்பதில்லை.

மக்கள் அவனது தந்தையை நோக்கி, இவன் இந்த நபரது மகனாவான். இந்த தீய செயலை செய்துள்ளான் என்று கூறுவார்கள். ஆக அவரது மகனே தனது தந்தையின் அவப்பெயருக்கு காரணியாகி விடுகின்றான்.

இவ்வாறே ஒரு நபர் ஒரு அமைப்பில் இணைகின்றார். பிறகு அந்த அமைப்பின் மகத்துவத்தையும், கண்ணியத்தையும் கருத்தில் கொள்ளாமல் இருக்கின்றார். மேலும் அதற்கு மாற்றமாக செயல்படுகின்றார் என்றால் பிறகு அவர் இறை தண்டனைக்கு ஆளாகின்றார். ஏனென்றால், அவர் தம்மை மட்டும் அழிவிற்கு ஆளாக்குவதில்லை. மாறாக, மற்றவர்களுக்கும் ஒரு தீய முன்மாதிரியாகத் திகழ்ந்து அவர்களையும் நற்பேறு மற்றும் நேர்வழியின் பாதையிலிருந்து இழப்பிற்குரியவராக ஆக்கி விடுகின்றார்.

எனவே எதுவரை உங்களது ஆற்றல் இருக்குமோ இறைவனிடம் உதவி தேடுங்கள். மேலும் உங்களது முழுமையான ஆற்றல் மற்றும் தைரியத்துடன் உங்களது பலவீனங்களை அகற்றுவதற்கு முயற்சி செய்யுங்கள். இறைவனிடம் உண்மையுடனும், நிச்சய உறுதியுடனும் கையை உயர்த்துங்கள். ஏனென்றால் பணிவுடன் உயர்த்தப்பட்ட கை உண்மையுடனுடம், நிச்சய உறுதியுடனும் உயர்கின்றது. அது திரும்பிச் செல்வதில்லை. நாம் அனுபவத்தின் அடிப்படையில் கூறுகின்றோம். நமது ஆயிரக்கணக்கான துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. மேலும் ஏற்றுக் கொள்ளப்பட்டும் வருகின்றது.

இதுவொரு உறுதியான விஷயமாகும். அதாவது எவர் ஒருவர் தன்னிடத்தில் மற்றவர்களுக்காக அனுதாபத்தின் உணர்வுகளை கொண்டிருப்பதில்லையோ அவர் கருமி ஆவார். நான் சிறந்ததும் மற்றும் நன்மைக்கான ஒரு வழியைப் பார்த்தால், அதைப் பற்றி மக்களை அழைத்துக் கூறுவது எனது கடமையாகும். அதன்படி எவராவது செயல்படுகின்றார்களா இல்லையா என்பதைப் பற்றி பொருட்படுத்த மாட்டேன். உயிர் பெற்று ஒவருவர் வந்தால் கூட அதுவே போதுமானதாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 125,126 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது சஹாபாக்களுக்கு இருந்த இந்த அன்பு மற்றும் நேசத்தின் காரணமாகத்தான் அவர்கள் தமது உயிரைப் பற்றி பொருட்படுத்தவில்லை**

**சுவர்க்கத்திற்குரிய நற்செய்தி வழங்கப்பட்ட பத்து நபர்களில் ஒருவரும், பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபியான ஹஸ்ரத் சயீது பின் ஸைது (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் ஆகியோரைப் பற்றிய நற்குறிப்பு**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 12 ஜுன் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **12 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று நான் எடுத்துரைக்க இருக்கின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் சயீது பின் ஸைது (ரலி) ஆகும். ஹஸ்ரத் சயீது (ரலி) அவர்களின் தந்தையின் பெயர் ஸைது பின் அம்ர் ஆகும். தாயாரின் பெயர் ஃபாத்திமா பின்த் பஅஜா ஆகும். அன்னார் அதீ பின் கஅப் பின் லுவி என்ற கோத்திரடத்துடன் தொடர்புடையவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் சயீது பின் ஸைது (ரலி) அவர்களின் சுட்டுப்பெயர் அபுல் அஃவர் ஆகும். சிலர் அபூ சவ்த் என்றும் கூறுகிறார்கள். அவர் உயரமானவர் என்றும் கோதுமை நிறத்தை உடையவர் என்றும் அடர்த்தியான முடிகளை கொண்டவர் என்றும் கூறப்படுகிறது.

அன்னார் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் தந்தைவழி சகோதரர் ஆவார். இவரது வம்சம் நான்காவது தலைமுறையில் நுஃபை அவர்கள் மூலமாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் இணைகிறது. எட்டாவது தலைமுறையில் கஅப் பின் லுவி என்பவர் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைகிறது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 292,294 சயீது பின் ஸைது – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 476 சயீது பின் ஸைது (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சயீது (ரலி) அவர்களின் ஆதிகா என்ற சகோதரியுடைய திருமணம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் நடந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சகோதரி ஃபாத்திமாவின் திருமணம் ஹஸ்ரத் சயீது அவர்களுடன் நடந்தது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு காரணமாக இருந்த அந்த சகோதரிதான் இந்த ஃபாத்திமா ஆவார்கள். ஹஸ்ரத் சயீது அவர்களின் தந்தை ஸைது பின் அம்ர் அவர்கள் அறியாமைக் காலத்தில் ஓர் இறைவனை வணங்கி வந்தார்கள். மேலும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் மார்க்கத்தை தேடி வந்தார்கள். ஹஸ்ரத் இப்ராஹீம் அவர்களின் இறைவன்தான் எனக்கும் இறைவன் ஆவான்; இப்ராஹீமின் மார்க்கம்தான் எனது மார்க்கமாகும் என்று கூறி வந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 476 சயீது பின் ஸைது (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 368 சயீது பின் ஸைது (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அந்தக் காலத்திலும் ஓர் இறைவனை வணங்கக்கூடியவர்கள் இருந்துள்ளார்கள். இஸ்லாத்திற்கு முன்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மார்க்கம் என்னவாக இருந்தது? அன்னார் யாரை வணங்கி வந்தார்கள்? என்று சில குழந்தைகள் கேள்வி கேட்கின்றனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லாரையும் விட அதிகமாக ஓர் இறைவனை வணங்கக் கூடியவர்களாக இருந்தார்கள். ஸைது பின் அம்ர் அவர்கள் எல்லாவித குற்றத்தில் இருந்தும், நெறிதவறிய செயல்களிலிருந்தும் விலகி இருந்தார்கள். அதேபோன்று இணைவைப்பவர்கள் அறுத்து உண்ணக்கூடிய உணவில் இருந்தும் விலகி இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபி என்று வாதிப்பதற்கு முன்பு அன்னாரை இவர்கள் ஒருமுறை சந்தித்துள்ளார்கள். அதன் விபரம் புகாரியில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வஹீ வருவதற்கு முன்பு ஸைது பின் அம்ர் பின் நுஃபைல் அவர்களை பல்தா என்ற இடத்திற்கு கீழே சந்தித்தார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபித்துவ வாதத்திற்கு முன்னுள்ள சம்பவமாகும்.

பல்தா என்பது மக்காவின் மேற்குப் பகுதியில் உள்ள ஒரு பள்ளத்தாக்கின் பெயராகும். மக்காவை நோக்கி செல்லும்போது தமீம் பாதையில் உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்பு உணவு விரிப்பு வைக்கப்பட்டது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்ண மறுத்து விட்டார்கள். நீங்கள் உங்களுடைய வீடுகளில் அறுப்பவற்றை நானும் உண்ண மாட்டேன். அல்லாஹ்வின் பெயர் கூறப்பட்டு அறுக்கப்பட்டதை மட்டுமே உண்ணுவேன் என்று ஸைது அவர்கள் கூறினார்கள். அல்லாஹ் அல்லாதவற்றின் பெயர் கூறி அறுக்கப்பட்டிருக்கலாம் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னெச்சரிக்கையாக உண்ணவில்லை. இதைக்கண்ட ஸைது அவர்களும், நானும் அல்லாஹ் அல்லாதவற்றின் பெயரால் அறுக்கப்பட்டதை உண்ண மாட்டேன் என்று கூறினார்கள்.

அறிவிப்பு தொடர்ச்சியாக கூறப்படுகிறது. ஸைது பின் அம்ர் அவர்கள் குரைஷிகளின் குர்பானி கால்நடைகளை குறைபாடுள்ளதாக கருதி வந்தார்கள். ஆட்டையும் அல்லாஹ்தான் படைத்தான். வானத்திலிருந்து அதற்காக நீரை பொழிந்தான்.

பூமியிலிருந்து அதற்காக தீவனத்தை முளைக்கச் செய்தான். பிறகு நீங்கள் அல்லாஹ்வைத்தவிர மற்றவற்றின் பெயரால் அறுக்கின்றீர்களே – அதாவது அல்லாஹ் அல்லாதவற்றின் பெயரால் அறுக்கப்படுவதை வெறுத்து வந்தார்கள். அதை மிகப்பெரும் பாவமாக கருதி வந்தார்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் ஃபஸாயில்... ஹதீஸ் எண் 3626)

ஸைது பின் அம்ர் அவர்கள் குஃப்ர் மற்றும் ஷிர்க்கிலிருந்து வெறுப்படைந்து உண்மையைத் தேடி வெகு தூரத்தில் உள்ள நாடுகளுக்கெல்லாம் பயணம் மேற்கொண்டார்கள். அவர்களுடைய இந்த பயணத்தை பற்றி புகாரி நூலில் ஓர் அறிவிப்பு இவ்வாறு வருகின்றது.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஸைது பின் அம்ர் பின் நுஃபைல் அவர்கள் மார்க்கத்தை பற்றி அறிந்து, அதை பின்பற்றுவதற்காக சிரியா நாட்டிற்கு சென்றார்கள். அங்கு அவர்கள் ஒரு யூத ஆலிமை சந்தித்தார்கள். அவரிடம் அவருடைய மார்க்கத்தைப் பற்றி கேட்டார்கள். உங்களுடைய மார்க்கத்தை பற்றி எனக்கு கூறுங்கள். ஒருவேளை நான் அதை ஏற்றுக் கொள்ளலாம் என்று யூத ஆலிமிடம் கேட்டார்கள். அதற்கு அந்த யூத ஆலிம் எங்களுடைய மார்க்கத்திற்கு நீங்கள் வர வேண்டாம். சீர்குலைந்து விட்டது. அப்படி வந்து விட்டால் நீங்கள் இறைகோபத்திலிருந்து உங்களது பங்கை பெற்றுக் கொள்வீர்கள் என்று கூறினார்.

அதற்கு ஸைது அவர்கள் நான் அல்லாஹ்வின் கோபத்திலிருந்து விலகி ஓடிக்கொண்டிருக்கின்றேன். மேலும் நான் அல்லாஹ்வின் கோபத்தை ஒருபோதும் பொறுத்துக் கொள்ள இயலாது. அதற்கான ஆற்றல் எனக்கு ஏது? என்று கூறினார்கள். இதைத்தவிர வேறு ஏதேனும் மார்க்கத்தை பற்றி நீங்கள் கூற முடியுமா? என்று கேட்டார்கள். அதற்கு அந்த யூத ஆலிம் எனக்கு தெரிந்ததெல்லாம் மனிதன் ஹனீஃப் ஆக இருக்க வேண்டும் என்று கூறினார். ஸைது அவர்கள் ஹனீஃப் என்றால் என்ன? என்று கேட்டார்கள். அதற்கு அவர், இப்ராஹீமுடைய மார்க்கம். அவர் யூதராகவும் இல்லை; கிறிஸ்தவராகவும் இல்லை; அவர் அல்லாஹ்வை மட்டும் வணங்கி வந்தார் என்று கூறினார்.

பிறகு ஸைது அவர்கள் அங்கிருந்து கிளம்பிச் சென்றார்கள். ஒரு கிறிஸ்தவ ஆலிமை சந்தித்தார்கள். அவரிடமும் இதையே கேட்டார்கள். அதற்கு அவர், நீங்கள் எங்களுடைய மார்க்கத்திற்கு வர வேண்டாம். இல்லையென்றால் நீங்கள் அல்லாஹ்வின் சாபத்திலிருந்து உங்களது பங்கைப் பெற்றுக் கொள்வீர்கள் என்று கூறினார்.

அதற்கு ஸைது அவர்கள், நான் அல்லாஹ்வின் சாபத்திலிருநது தப்பி ஓடுகிறேன். மேலும் அல்லாஹ்வுடைய சாபம் மற்றும் அவனுடைய கோபத்தை என்னால் பொறுத்துக் கொள்ள இயலாது. அதற்கான ஆற்றல் எனக்கேது? என்று கூறியவாறு வேறு ஏதாவது மார்க்கத்தைப் பற்றி உங்களால் கூற இயலுமா என்று கேட்டார்கள். அதற்கு அவர் மனிதன் ஹனீஃப் ஆக இருக்க வேண்டும் என்று கூறினார். ஹனீஃப் என்றால் என்ன? என்று ஸைது அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர் இப்ராஹீமுடைய மார்க்கமாகும். அவர் யூதராகவும் இல்லை; கிறித்தவராகவும் இல்லை. அவர் அல்லாஹ்வை மட்டும் வணங்கி வந்தார் என்று கூறினார். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களைப் பற்றி அந்த நபருடைய கருத்தை கேட்ட பிறகு ஸைது அங்கிருந்து சென்றார்.

அவர் வெளியே மைதானத்திற்கு வந்த பிறகு தனது இரு கைகளையும் உயர்த்தி, எனது அல்லாஹ்வே! நான் இப்ராஹீமுடைய மார்க்கத்தில் இருப்பதாக ஒப்புக் கொள்கிறேன் என்று கூறினார்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் ஃபஸாயில்... ஹதீஸ் எண் 3627)

ஸைது பின் அம்ர் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தை அடைந்தார்கள். ஆனால் அன்னாரது நபித்துவ வாதத்திற்கு முன்பு மரணமடைந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் ஆமிர் பின் ரபீஆ கூறுகின்றார்கள்: ஸைது பின் அம்ர் அவர்கள் மார்க்கத்தை தேடி வந்தார்கள். அவர்கள் யூத மார்க்கம், கிறித்தவ மார்க்கம், சிலைகள் கற்களை வணங்குவதை வெறுத்து வந்தார்கள். மேலும் அவர் தனது சமுதாயத்துடன் மாற்றுக்கருத்து கொண்டிருந்தார்கள். மேலும் அவர்களுடைய முன்னோர்கள் வணங்கி வந்த சிலைகளை விட்டுவிடும்படி அவர்களுக்கு கூறி வந்தார்கள். அவர்கள் அறுத்ததை இவர்கள் உண்ணுவது கிடையாது.

ஒரு முறை அவர்கள் என்னிடம், ஆமிரே! பாருங்கள். நான் எனது சமுதாயத்துடன் மாற்றுக்கருத்து கொண்டுள்ளேன். நான் இப்ராஹீமுடைய மார்க்கத்தை பின்பற்றக்கூடியவனாக இருக்கின்றேன். இப்ராஹீம் எதை வணங்கி வந்தாரோ அதை நான் வணங்குகிறேன். அவருக்குப் பிறகு இஸ்மாயீலை நான் பின்பற்றுகிறேன். அவர்கள் இதே கிப்லாவை நோக்கித்தான் தொழுது வந்தார்கள். மேலும் நான் இஸ்மாயீல் அவர்களின் வழித்தோன்றலிலிருந்து ஒரு நபியை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் அந்த நபி உண்மையானவர் என்று அவரை உண்மைப்படுத்தவும், அவர் மீது ஈமான் கொள்ளவும், சாட்சி கூறவும் எனக்கு அவருடைய காலம் கிடைக்காது போல் தெரிகிறது. ஆகவே ஆமிரே! நீர் அவருடைய காலத்தை அடைந்தால் அவருக்கு எனது சலாத்தை கூறுவீராக என்று கூறினார்கள்.

ஆமிர் கூறுகிறார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றியபோது முஸ்லிம் ஆனேன். மேலும் ஹுஸூர் (ஸல்) அவர்களிடத்தில் ஸைது பின் அம்ர் அவர்களின் தூதுச் செய்தியை எடுத்துரைத்தேன். சலாம் கூறினேன். பெருமானார் (ஸல்) அவர்கள் சலாத்திற்குப் பதில் கூறினார்கள். மேலும் அவருக்காக அருள் வேண்டி துஆ செய்தார்கள். அவர்கள் சொர்க்கத்தில் நடப்பதை நான் கண்டேன் என்று கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 290 சயீது பின் ஸைது – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஸைது அவர்கள் தாம் ஓர் இறைவனை வணங்கி வந்ததில் மிகவும் பெருமை கொண்டிருந்தார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நீர் அவர்களுக்காகப் பாவமன்னிப்புக் கோரினாலும் அல்லது கோராதிருந்தாலும் (இரண்டும் அவர்களுக்குச் சமமே). நீர் அவர்களுக்காக எழுபது தடவை பாவமன்னிப்புக் கோரினாலும் அல்லாஹ் அவர்களை ஒருபோதும் மன்னிக்க மாட்டான். இதற்குக் காரணம், அவர்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் நிராகரித்ததேயாகும். மேலும் கட்டுப்படாத சமுதாயத்தினர்க்கு அல்லாஹ் ஒருபோதும் வெற்றிக்குரிய பாதையினைக் காட்டமாட்டான். (9:80)

Faizal Hameed Ilahi, Tittacherry

ஹஸ்ரத் அஸ்மா பின்த் அபூபக்கர் அவர்கள் அறியாமை காலத்து சம்பவம் ஒன்றை எடுத்துரைக்கிறார்கள். ஸைது பின் அம்ர் பின் நுஃபைல் அவர்களை நான் கண்டுள்ளேன். அவர் கஅபாவில் தனது முதுகை சாய்த்துக் கொண்டு நின்றவாறு, குரைஷிகளே! உங்களில் என்னை தவிர வேறு எவரும் இப்ராஹீமுடைய மார்க்கத்தில் இல்லை என்று கூறினார்கள். மேலும் ஸைது அவர்கள் பெண் பிள்ளைகளை உயிரோடு புதைத்தது கிடையாது.

அதாவது அரபு நாட்டில் சில கோத்திரங்களில் பெண் குழந்தைகளை உயிரோடு புதைக்கக்கூடிய வழக்கம் இருந்தது. அவர் அவ்வாறு செய்தது கிடையாது. எவராவது தனது மகளை கொலை செய்ய நினைத்தால், அவரைப் பற்றி தெரிய வந்தால், பிள்ளைகளை கொலை செய்யாதீர்கள். நான் அவர்களுடைய செலவு, உணவு போன்றவற்றை உங்கள் இடத்தில் ஏற்பாடு செய்து தருகிறேன் என்று கூறுவார். அவர்களிடமிருந்து அக்குழந்தைகளை வாங்கிக் கொள்வார்கள். அந்த பெண்கள் இளமை பருவத்தை அடையும்போது அவர்களின் தந்தையிடம் நீங்கள் விரும்பினால் இவர்களை உங்களிடத்தில் ஒப்படைத்து விடுகிறேன். அல்லது நீங்கள் விரும்பினால் இவர்களின் எல்லா பணிகளையும் நான் பூர்த்தி செய்து கொடுக்கிறேன் என்று கூறுவார்.

அதாவது திருமணம் போன்ற செலவுகள் அனைத்தையும் நான் செயது விடுகிறேன் என்று கூறுவார்.

இன்னொரு அறிவிப்பில் ஹஸ்ரத் அஸ்மா பின்த் அபூபக்ர் அறிவிக்கின்றார்கள். முதல் அறிவிப்பு புகாரியின் அறிவிப்பாகும். இரண்டாவது அறிவிப்பு வரலாற்று நூலான அஸதுல் காபா என்ற நூலின் அறிவிப்பாகும். அஸ்மா பின்த் அபூபக்ர் அறிவிக்கின்றார்கள். ஸைது பின் அம்ர் பின் நுஃபல் அவர்கள் கஅபாவில் தனது முதுகை சாய்த்துக் கொண்டு நின்றவாறு, குரைஷி மக்களே! எந்த இறைவனுடைய கையில் ஸைதின் உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக! என்னைத்தவிர உங்களில் எவருமே இப்ராஹீமுடைய மார்க்கத்தில் காலை விடியலை கண்டதில்லை.

மேலும் அவர் இவ்வாறும் கூறியதுண்டு. அதாவது அல்லாஹ்வே! உன்னை வணங்கக்கூடிய அழகிய வழிமுறை எனக்கு தெரிந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். அதே வழிமுறையில் நான் உன்னை வணங்கி இருப்பேனே! ஆனால் அந்த வழிமுறை எனக்கு தெரியாது என்று கூறியவாறு தனது உள்ளங்கையின் மீது சஜ்தா செய்வார்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 369, 370 சயீது பின் ஸைது (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சயீது பின் முஸய்யப் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபித்துவத்திற்கு ஐந்து வருடங்கள் முன்புதான் ஸைது பின் அமர் அவர்கள் மரணமடைந்தார்கள். அப்போது குரைஷிகள் கஅபாவின் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டிருந்தனர். அவர் மரணம் அடையும்போது, இப்ராஹீமின் மார்க்கத்தில் நான் உள்ளேன் என்று கூறினார்.

இன்று நான் சயீது பின் ஸைது என்ற சஹாபியைப் பற்றி கூறி வருகிறேன். அவருடைய தந்தை பற்றி சம்பவங்களையும் சுருக்கமாக எடுத்துரைத்தேன். மகனுக்கும் இஸ்லாத்தில் பெரும் அந்தஸ்து கிடைத்தது. தந்தை செய்த நன்மையின் காரணமாக அவருடைய சம்பவங்களும் வரலாற்றில் பாதுகாக்கப்பட்டன. ஆகவேதான் நான் இந்த சம்வங்களையும் இங்கு குறிப்பிட்டேன். ஏனென்றால் இந்த சம்பவங்கள் புகாரியில் காணக்கிடைக்கின்றன. இப்போது நான் ஹஸ்ரத் சயீது பின் ஸைது அவர்களைப் பற்றி மீதமுள்ள சம்பவங்களை குறிப்பிடுவேன்.

ஒரு முறை ஹஸ்ரத் சயீது பின் ஸைது அவர்களும் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் அவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். அன்னாரிடம் ஸைது பின் அம்ர் அவர்களை பற்றி கேட்டார்கள். அதாவது ஹஸ்ரத் சயீது பின் ஸைது அவர்களின் தந்தையைப் பற்றி கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ் ஸைது பின் அம்ர் அவர்களை மன்னிப்பானாக! அவர் மீது கருணை காட்டுவானாக! அவரது மரணம் இப்ராஹீமுடைய மார்க்கத்தில் இருந்தது என்று கூறினார்கள். இதன்பிறகு முஸ்லிம்கள் ஸைது பின் அம்ர் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர்களுக்காக அருள், பாவமன்னிப்பு வேண்டி துஆ செய்வார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 291 சயீது பின் ஸைது – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இன்னனொரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் ஸைது பின் அம்ர் அவர்களைப் பற்றி கேட்கப்பட்டபோது, அவர் கியாமத் நாளில் தனியாக ஒரு உம்மத்திற்கு நிகராக எழுப்பப்படுவார்கள் என்று பதிலளித்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 368 சயீது பின் ஸைது – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று ஹஸ்ரத் சயீது பின் ஸைது அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சகோதரியின் கணவர் ஆவார். மேலும் ஹஸ்ரத் சயீது பின் ஸைது அவர்களின் சகோதரி ஆத்திகா பின் ஸைது அவர்களுக்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் திருமணம் நடந்திருந்தது. ஹஸ்ரத் சயீது பின் ஸைது அவர்களும் அவரது மனைவி ஹஸ்ரத் ஃபாத்திமா பின்த் கத்தாப் அவர்களும் ஆரம்ப காலத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு முஸ்லிமாகிவிட்டனர்.

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாரே அர்கமிற்கு செல்வதற்கு முன்பாகவே இவர்கள் ஈமான் கொண்டு விட்டனர். ஹஸ்ரத் சயீது பின் ஸைது அவர்களின் மனைவி ஹஸ்ரத் ஃபாத்திமா அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு காரணமாக அமைந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 292 சயீது பின் ஸைது – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 476 சயீது பின் ஸைது (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வே தன் அடியார்களின் கழிவிரக்கத்தை ஏற்றுக் கொள்பவனும், அவர்களின் தானங்களை ஒப்புக் கொள்பவனும் ஆவான் என்பதையும், மேலும் நிச்சயமாக அல்லாஹ்வே கழிவிரக்கத்தை அதிகமாக ஏற்றுக் கொள்பவனும், மீண்டும் மீண்டும் அருள் செய்பவனுமாவான் என்பதையும் அவர்கள் அறிவதில்லையா? (9:104)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

இது பற்றிய விரிவான விளக்கம் ஹஸ்ரத் கப்பாப் அவர்களைப் பற்றி குறிப்பிடும்போது கூறப்பட்டு விட்டது. ஆயினும் இங்கே ஹஸ்ரத் சயீது பின் ஸைது பற்றி கூறப்பட்டு வருவதால் இந்த சம்பவத்தையும் சுருக்கமாகக் கூறுகிறேன்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் சீரத் காத்துமன் நபிய்யீன் என்ற நூலில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

ஹஸ்ரத் ஹம்ஸா அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு சில நாட்கள் கழிந்திருந்தன. அல்லாஹ் முஸ்லிம்களுக்கு இன்னொரு நற்செய்தியையும் வழங்கினான். அது என்னவென்றால், இஸ்லாத்தின் கடும் எதிரியாக இருந்த உமர் அவர்களும் முஸ்லிம் ஆனார். அவர்களின் இயல்பில் கடுமை காணப்பட்டது. முன்னரே அவரது இயல்பில் அந்த கடுமை இருந்தது. ஆனால் இஸ்லாத்தின் மீதான பகைமை, எதிர்ப்பில் அந்த கடுமை இன்னும் அதிகரித்தது.

ஆரம்ப காலத்தில் ஏழை எளிய பலவீனமான முஸ்லிம்களுக்கு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதன் காரணமாக கடுமையான துன்பங்களை கொடுத்து வந்தார்கள். இந்த மக்களுக்கு நான் துன்பங்கள் கொடுத்து வருகிறேன். இவர்கள் திருந்துவதாக தெரியவில்லை. தனது ஈமானில் உறுதியாக உள்ளார்கள். இந்த குழப்பத்தின் தோற்றுனரை முடித்து விட்டால் என்ன? என்று ஒரு நாள் அவர்களுக்குத் தோன்றியது.

இந்த எண்ணத்துடன் வீட்டை விட்டு வெளியேறினார்கள். கையில் உருவிய வாள் இருந்தது. வழியில் ஒரு நபரை சந்தித்தார்கள். உமர் அவர்கள் கடுங்கோபத்துடன் உருவிய வாளுடன் செல்வதை அந்த நபர் கண்டார். மேலும் உமரே! எங்கே செல்கின்றீர்? என்று கேட்டார். அதற்கு உமர் அவர்கள், இன்று நான் முஹம்மது (ஸல்) அவர்களை முடிக்க செல்கிறேன் என்று பதிலளித்தார்கள். அதற்கு அம்மனிதர், முதலில் உங்களுடைய வீட்டைப்பற்றி நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். உங்களது சகோதரியும், அவளுடைய கணவரும் முஸ்லிமாகி விட்டார்கள் என்று கூறினார்.

இதைக்கேட்டதும் தான் செல்லும் திசையை மாற்றினார்கள். தனது சகோதரியின் வீட்டை நோக்கி செல்ல ஆரம்பித்தார்கள். வீட்டிற்கு அருகில் சென்றதும் வீட்டுக்குள்ளிருந்து திருக்குர்ஆன் ஓதும் ஓசை வந்து கொண்டிருந்தது. கப்பாப் பின் அரது அவர்கள் மிக அழகிய குரலில் திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருந்தார்கள். இந்த குலலை கேட்டவுடன் ஹஸ்ரத் உமர் அவர்களின் கோபம் இன்னும் அதிகரித்தது. மிக விரைவாக, திடீரென கதவை திறந்து வீட்டுக்குள் நுழைந்தார்கள். அவரது காலடி ஓசை கேட்டு கப்பாப் அவர்கள் எங்கோ ஒளிந்து கொண்டார்கள். ஏதோ மறைவிடத்தில், திரைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டார்கள்.

உமர் அவர்களின் சகோதரியான ஃபாத்திமாக அவர்கள் உடனடியாக திருக்குர்ஆனின் அந்த பாகங்களை ஒளித்து வைத்துவிட்டார்கள். உமர் அவர்கள் ஃபாத்திமா மற்றும் ஹஸ்ரத் சயீது அவர்களிடத்தில், நீங்கள் உங்களது மார்க்கத்தை விட்டு முகம் திருப்பி விட்டீர்கள் என்று கேள்விப்பட்டேன் என்று கூறியவாறு தனது சகோதரியின் கணவரான ஹஸ்ரத் சயீது பின் ஸைது அவர்களை அடிக்கச் சென்றார்கள். ஃபாத்திமா தனது கணவரை பாதுகாப்பதற்காக இடையில் வந்து விட்டார்கள். ஆனால் அப்போது ஹஸ்ரத் உமர் அவர்களின் தாக்குதலுக்கு ஃபாத்திமாக ஆளாகி விட்டார்கள். அதன் காரணமாக அவர்கள் காயமுற்றார்கள்.

எப்படி இருந்தபோதிலும் காயமுற்ற பிறகு ஃபாத்திமா அவர்களின் துணிவு இன்னும் அதிகரித்தது. அவர்கள் மிக தைரியத்துடன், உமரே! நாங்கள் முஸ்லிமாகி விட்டோம். உங்களால் என்ன செய்ய முடியுமோ செய்து கொள்ளுங்கள். நாங்கள் இஸ்லாத்தை விடமாட்டோம் என்று கூறினார்கள். தனது சகோதரியின் துணிவான இச்சொற்களை கேட்டவுடன் கண்களை உயர்த்தி அவர்கள் பார்த்தார்கள். சகோதரி இரத்தத்தில் நனைந்திருந்தார்கள். அவரது முகத்திலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

இந்தக் காட்சி ஹஸ்ரத் உமர் அவர்களுடைய இயல்பில் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தியது. உடனே அவர் நீங்கள் ஓதிக் கொண்டிருந்த அந்த வேதத்தை எனக்கு காட்டுங்கள் என்று கேட்டார். நீங்கள் அதன் பாகங்களை வீணாக்கி விடுவீர்கள் என்று ஃபாத்திமா பதிலளித்தார்கள். அதற்கு உமர் அவர்கள், இல்லை; இல்லை. நான் வீணாக்க மாட்டேன். நான் திருப்பிக் கொடுத்து விடுவேன் என்று கூறினார்கள். அதற்கு ஃபாத்திமா அவர்கள் இந்த நிலையில் உங்களுக்கு தரமுடியாது. நீங்கள் முதலில் குளித்துவிட்டு வாருங்கள் என்று கூறினார்கள்.

ஆகவே அவர் குளித்து விட்டு வந்தவுடன் ஃபாத்திமா திருக்குர்ஆனுடைய அந்த பக்கங்களை எடுத்து அவருக்கு முன்னால் வைத்தார்கள். அவர் அந்தப் பக்கங்களை ஓத ஆரம்பித்தார்கள். சூரா தாஹாவுடைய ஆரம்ப வசனங்களாக அவை இருந்தன. ஹஸ்ரத் உமர் அவர்கள் மிகவும் தாக்கத்திற்குள்ளான உள்ளத்துடன் அவற்றை ஓத ஆரம்பித்தார்கள். அவரது இயல்பு நல்ல இயல்பாக இருந்தது; ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துஆவும் இருந்தது; அவர் ஓத ஆரம்பித்தவுடன் அதன் ஒவ்வொரு எழுத்தும் அவரது உள்ளத்தில் இறங்கிக் கொண்டே சென்றது. அவர் ஓதியவாறு இந்த இரு வசனங்களை அடைந்தார்.

إِنَّنِي أَنَا اللَّهُ لَا إِلَٰهَ إِلَّا أَنَا فَاعْبُدْنِي وَأَقِمِ الصَّلَاةَ لِذِكْرِي ۝

إِنَّ السَّاعَةَ آتِيَةٌ أَكَادُ أُخْفِيهَا لِتُجْزَىٰ كُلُّ نَفْسٍ بِمَا تَسْعَىٰ ۝

அதாவது நிச்சயமாக இவ்வுலகை படைத்த ஒரே இறைவன் நானே ஆவேன். என்னையன்றி வேறு எவனும் வணக்கத்திற்குரியவன் இல்லை. எனவே நீர் என்னையே வணங்கி என்னை நினைவு கூர்வதற்காக தொழுகையை நிலைநாட்டுவீராக. நிச்சயமாக வாக்களிக்கப்பட்ட நேரம் வெகு விலைவில் வர உள்ளது. ஒவ்வொரு ஆன்மாவுக்கும் செயல்களுக்கு ஏற்ப கூலி வழங்கப்படுவதற்காக நான் அதனை வெளிப்படுத்த இருக்கின்றேன். (20:15,16)

ஹஸ்ரத் உமர் அவர்கள் இந்த வசனத்தை ஓதியவுடன் அவர்களது கண்கள் திறந்த விட்டன. அவர்கள் தன்னை அறியாமல்

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ் நம்பிக்கை கொண்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் சுவர்க்கங்களை வாக்களித்துள்ளான். அவற்றின் கீழ் ஆறுகள் ஓடும். அவர்கள் அவற்றில் என்றென்றும் வாழ்வர். மேலும் நிரந்தரமான சுவர்க்கங்களில் தூய்மையான இல்லங்களை(யும் வாக்களித்துள்ளான்). மேலும் (அவர்களுக்குக் கிடைக்கவிருக்கின்ற) அல்லாஹ்வின் திருப்தியே எல்லாவற்றையும் விட மிகப் பெரியது. இதுவே (மா)பெரும் வெற்றியாகும். (9:72)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

இது எத்தகைய வினோதமான வேதமாக உள்ளது; எத்தகைய தூய வேதமாக உள்ளது என்று கூறினார்கள். இந்த சொற்களை கேட்டவுடன் ஒளிந்திருந்த அவர் வெளியே வந்தார். மேலும் இறைவனுக்கு நன்றி செலுத்தினார். அவரிடம் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துஆவின் விளைவேயாகும். ஏனென்றால் இறைவன் மீது ஆணையாக! நேற்றுதான் அன்னார் இவ்வாறு துஆ செய்வதை நான் கேட்டேன். அதாவது அல்லாஹ்வே! உமர் பின் கத்தாப் அல்லது அம்ர் பின் ஹிஷாம் அதாவது அபூஜஹ்ல் இருவரில் ஒருவரை இஸ்லாத்திற்கு கொண்டுவா என்று அன்னார் துஆ செய்தார்கள்.

எப்படி இருந்தபோதிலும் அவர்கள் கப்பாபிடம் பெருமானார் (ஸல்) அவர்கள் எங்கே இருக்கின்றார்கள்? என்று கேட்டார்கள். மேலும் உருவிய வாளை உறையில் போடவில்லை. உருவிய வாள் அவ்வாறே இருந்தது. அக்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாரே அர்கமில் இருந்தார்கள். ஆகவே அவர்கள் அந்த முகவரியை கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் அவர்கள் அங்கு சென்றார்கள். வாசலை அடைந்தவுடன் வேகமாக கதவை தட்டினார்கள். கதவின் துளை வழியாக அவர்கள் உருவிய வாளுடன் நிற்பதை சாஹாபாக்கள் கண்டனர். இதன் காரணமாக கதவு திறக்க தாமதமானது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கதவை திறங்கள் என்று கூறினார்கள். அங்கு ஹஸ்ரத் ஹம்ஸா அவர்களும் இருந்தார்கள். அவர்களும் கதவை திறக்குமாறு கூறினார்கள்.

நல்ல எண்ணத்துடன் அவர் வந்தால் நல்லது. இல்லையென்றால் தீய எண்ணத்துடன் அவர் வந்திருந்தால் அவர் கொண்டு வந்த வாளைக் கொண்டு அவரது தலையை சீவி விடுவேன் என்று ஹஸ்ரத் ஹம்ஸா அவர்கள் கூறினார்கள். கதவு திறக்கப்பட்டது. உருவிய வாளுடன் ஹஸ்ரத் உமர் அவர்கள் உள்ளே வந்தார்கள். என்ன நோக்கத்தில் வந்துள்ளீர்கள்? என்று அவரை பிடித்து உலுக்கியவாறு அன்னார் கேட்டார்கள். அதற்கு உமர் அவர்கள், யா ரஸூலுல்லாஹ்! நான் முஸ்லிமாவதற்கு வந்துள்ளேன் என்று கூறினார்கள். இந்த சொற்களை கேட்டவுடன் மகிழ்ச்சியின் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள். அத்துடன் சஹாபாக்களும் எந்த அளவு உரத்த குரலுடன் அல்லாஹு அக்பர் என்று முழுங்கினார்கள் என்றால் மக்காவுடைய மலைகள் குலுங்கி விட்டன.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 157–159)

ஆகவே இந்த ஹஸ்ரத் சயீது அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு காரணமாக அமைந்தார்கள். இவர் ஆரம்பகால முஹாஜிரீன்களில் ஒருவராக இருந்தார். மதீனா சென்றடைந்ததும் ஹஸ்ரத் அபூ லபாபா அவர்களின் சகோதரரான ஹஸ்ரத் ரிஃபா பின் அப்துல் முன்ஸிர் அவர்களின் வீட்டில் தங்கினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ராஃபிஃ பின் மாலிக் அவர்களுடன் இவருடைய சகோதர பந்தத்தை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். இன்னொரு அறிவிப்பின் அடிப்படையில் உபை பின் கஅப் அவர்களுடன் ஏற்படுத்திக் கொடுத்தார்கள். இவர் பத்ர் போரில் கலந்து கொள்ள இயலாமல் போய்விட்டது. ஆயினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போர் செல்வத்திலிருந்து இவருக்கான பங்கை கொடுத்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 292 சயீது பின் ஸைது – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 476 சயீது பின் ஸைது (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது எந்தெந்த வகையில் எல்லாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த சஹாபாக்களை இணைத்துக் கொண்டார்களோ அல்லது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலுக்கிணங்க இவர்களுக்கான பங்கு கொடுக்கப்பட்டு இணைக்கப்பட்டார்களோ, நானும் இதன் காரணமாகத்தான் இந்த சஹாபாக்களை பத்ர் சஹாபாக்களுடன் சேர்த்துக் கொண்டேன். இவர் பத்ர் போரில் கலந்து கொள்ளாததன் காரணத்தை ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் அவர்களைப் பற்றிய குறிப்பில் கூறப்பட்டுவிட்டது. ஆயினும் இங்கும் அதுபற்றி கூறுவது அவசியமாகும். ஆகவே நான் கூறுகிறேன்.

அதாவது ஹஸ்ரத் சயீது பின் ஸைது அவர்கள் பத்ர் போரில் கலந்து கொள்ளாததன் காரணமாக கூறப்பட்டுள்ளது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குரைஷிகளின் ஒரு பயணக்குழு சிரியாவிலிருந்து கிளம்புவதை கணித்தார்கள். ஆகவே அன்னார் (ஸல்) அவர்கள் மதீனாவில் இருந்து பத்ர் போருக்கு கிளம்புவதற்கு பத்து நாட்களுக்கு முன்பு ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் சயீது பின் ஸைது ஆகிய இருவரையும் அந்த பயணக்குழு குறித்து செய்தியை சேகரித்து வருவதற்காக அனுப்பி வைத்தார்கள். அந்த இருவரும் அவ்ராஃ என்ற இடத்தை அடைந்தார்கள். அங்கேயே காத்திருந்தார்கள். அந்த பயணக்குழு இந்த இருவரையும் கடந்து சென்று விட்டது.

அவ்ராஃ என்பது செங்கடலின் அருகில் உள்ள ஒரு தங்குமிடமாகும். அங்கிருந்துதான் ஹிஜாஸ் மற்றும் சிரியாவுக்கு இடையில் செல்லக்கூடிய பயணக்குழு கடந்து செல்லும். எப்படி இருந்தபோதிலும் ஹஸ்ரத் தல்ஹா மற்றும் ஹஸ்ரத் சயீது ஆகிய இருவருக்கும் அந்த பயணக்குழு கடந்து சென்று விட்டதன் செய்தி கிடைத்து விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல) அவர்கள் சஹாபாக்களை அழைத்துக் கொண்டு அந்த பயணக்குழுவை பின்தொடர்ந்து சென்றார்கள். ஆனால் அந்த பயணக்குழு கடற்கரையை ஒட்டியுள்ள வழியாக மிக விரைவாக கடந்து சென்று விட்டது. அதைத் தேடிக் கொண்டிருக்கக்கூடிய மக்களிடமிருந்து தப்பிப்பதற்காக இரவு பகலாக அவர்கள் பயணம் செய்து சென்று விட்டார்கள்.

பயணக்குழு தனது வழியை மாற்றி அமைத்து சென்றுவிட்டது. ஆகவே இவர்கள் சந்தித்துக் கொள்ளவில்லை. எந்த வழியாக அந்த பயணக்குழு கடக்கும் என்று காத்திருந்தார்களோ அந்த வழியாக அது கடக்கவில்லை. மாறாக ஒரு சுற்று சுற்றி கடற்கரை வழியாக சென்று விட்டது. ஆகவே ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் சயீது பின் ஸைது ஆகிய இருவரும் ஹஸ்ரத் நபிகள்

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக வானங்கள், பூமி ஆகியவற்றின் ஆட்சி அல்லாஹ்விற்குரியதே. அவன் உயிரையும் வழங்குகின்றான்; மரணத்தையும் கொடுக்கின்றான். மேலும் அல்லாஹ்வைத்த தவிர உங்களுக்கு நண்பரோ உதவி செய்பவரோ வேறெவரும் இல்லை. (9:116)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

நாயகம் (ஸல்) அவர்களுக்கு செய்தி கூறுவதற்காக மதீனாவிற்கு திரும்பினார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போருக்காக கிளம்பிய விஷயம் அவ்விருவருக்கும் தெரியாது. இவர்கள் மதீனாவை வந்தடைந்த நாளில்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குரைஷி படைக்கு எதிராக போரிட்டார்கள். இந்த இருவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்திப்பதற்காக மதீனாவிலிருந்து கிளம்பினார்கள். அங்கு போர் முடிந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தர்பான் என்ற இடத்தில் திரும்பி வந்து கொண்டிருக்கும்போது இவர்களை சந்தித்தார்கள்.

இந்த இடம் மதீனாவிலிருநது 19 மைல் தூரத்தில் உள்ள ஒரு பள்ளத்தாக்கு ஆகும். அந்த பள்ளத்தாக்கில் சுவைமிக்க தண்ணீர் கிணறுகள் இருந்தன. பத்ர் போருக்கு செல்லும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இங்கு தங்கிவிட்டு சென்றார்கள். கடந்து சென்ற பயணக்குழு வேறு; போரிட்ட பயணக்குழு வேறு. அதாவது தாக்குதல் தொடுக்கும் எண்ணத்துடன் மக்காவிலிருநது புறப்பட்ட படை வேறு. பத்ர் என்ற இடத்தில் இரண்டு அணிகளும் சந்தித்துக் கொண்டன.

எப்படியிருப்பினும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தப் பயணக்குழுவின் நோக்கத்தை அறிந்து கொள்வதற்காக மதீனாவை விட்டு கிளம்பிச் சென்று விட்டார்கள். ஒரு படை வருவது பற்றி அவர்களுக்கு தெரியாது. ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் சயீது பின் ஸைது இருவரும் போரில் பங்கெடுக்க முடியவில்லை. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போர் செல்வத்திலிருந்து அவர்களுக்கு பங்கு கொடுத்தார்கள். அந்த இருவரும் பத்ர் போரில் பங்கெடுத்தவர்களோடு இணைத்துக் கொள்ளப்பட்டார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 292,293 சயீது பின் ஸைது – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸீரத்துன் நபவிய்யா தொகுதி 2 பக்கம் 123)

ஹஸ்ரத் சயீது பின் ஸைது அவர்கள் நற்செய்தி கூறப்பட்ட 10 நபர்களில் ஒருவர் ஆவார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த உலகிலேயே சொர்க்கவாசிகள் என முன்னறிவித்த 10 நபர்களில் ஒருவராக இருந்தார்கள்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபூபக்ர், உமர், உஸ்மான், அலி, தல்ஹா, சுபைர், அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப், சஅது பின் அபீ வக்காஸ், சயீது பின் ஸைது மற்றும் அபூ உபாதா பின் ஜராஹ் ஆகியோரின் பெயர்களை தனித்தனியாக எடுத்துக்கூறி இவர்கள் சொர்க்கவாசிகள் என்று கூறினார்கள்.

(குலாம் பாரி ஸைஃப் அவர்கள் எழுதிய ரோஷன் சிதாரே என்ற நூல், தொகுதி 2 பக்கம் 155)

சயீது பின் ஸைது அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஒன்பது நபர்களை குறித்து இவர்கள் சொர்க்கவாசிகள் என்று நான் சாட்சி கூறுகிறேன். மேலும் பத்தாவது நபர் குறித்தும் இதே சாட்சியை கூறினால் நான் பாவியாக இருக்கமாட்டேன் என்று கூறினார்கள். அது எவ்வாறு? என்று கேட்கப்பட்டபோது அவர்கள் கூறினார்கள். நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஹிரா மலை மீது அமர்ந்திருந்தோம். அப்போது ஹிரா மலை குலுங்கத் தொடங்கியது. அதைக்கண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிரா மலையே! குலுங்க வேண்டாம். நிச்சயமாக உன்மீது ஒரு நபியும், சித்தீக்கும், ஷஹீதும் உள்ளனர் என்று கூறினார்கள்.

சொர்க்கவாசிகளான அந்த பத்து நபர்கள் யாரென்று ஒருவர் கேட்டார். சயீது பின் ஸைது அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அபூபக்ர், உமர், உஸ்மான், அலி, தல்ஹா, சுபைர், சஅது மற்றும் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் ஆகியோர் ஆவார்கள்.

பத்தாவது நபர் யார் என்று கேட்கப்பட்டபோது அது நான்தான் என்று சயீது பின் ஸைது அவர்கள் கூறினார்கள்.

(சுனன் திர்மிதி, அப்வாவுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3757 & அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 478 சயீது பின் ஸைது (ரலி) – 2016 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சயீது பின் சுபைர் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் உமர், ஹஸ்ரத் உஸ்மான், ஹஸ்ரத் அலி, ஹஸ்ரத் தல்ஹா, ஹஸ்ரத் சுபைர், ஹஸ்ரத் சஅத், ஹஸ்ரத் அப்துர் ரய்மான், ஹஸ்ரத் சயீது பின் ஸைது ஆகியோர் யுத்த மைதானத்தில் அன்னாருக்கு முன்னால் இருப்பார்கள். அதாவது அன்னாரை பாதுகாப்பார்கள். தொழுகையில் அன்னாருக்கு பின்னால் நிற்பார்கள் என்று கூறியுள்ளார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 2 பக்கம் 478 சயீது பின் ஸைது (ரலி) – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹகீம் பின் முஹம்மது அவர்கள் தனது தந்தையிடமிருந்து இதை அறிவிக்கிறார்கள்: அவர்கள் சயீது பின் ஸைது அவர்களுடைய மோதிரத்தில் திருக்குர்ஆனுடைய வசனம் எழுதப்பட்டிருப்பதைக் கண்டார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 294 சயீது பின் ஸைது – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹஸ்ரத் சயீது பின் ஸைது அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களின் கீழ் காலாட்படைக்கு தளபதியாக நியமிக்கப்பட்டார்கள். டமாஸ்கஸை சுற்றி முகாமிடுதல் மற்றும் யர்மூக் எனும் தீர்ப்பு வழங்கக்கூடிய போரிலும் மிகவும் துணிவுடனும் வீரத்துடனும் அன்னார் பங்கு பெற்றார்கள். போரின்போது சயீது பின் ஸைது அவர்கள் டமாஸ்கஸ் கவர்னராக நியமிக்கப்பட்டார்கள். ஆனால் அவர்கள் அபூ உபைதா அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள்.

அதாவது நீங்கள் அனைவரும் போரில் பங்கு பெற்று வருகின்றீர்கள். நான் அதிலிருந்து விலகி இருக்கின்றேன். என்னால் இவ்வாறு இருக்க முடியாது. ஆகவே இந்த கடிதம் கிடைத்த உடனேயே என் இடத்தில் வேறு ஒருவரை அனுப்பி வைத்து விடுங்கள். நான் வெகு விரைவாக உங்களிடத்தில் வந்து விடுகிறேன் என்று அதில் எழுதப்பட்டிருந்தது. ஆகவே அபூ உபைதா அவர்கள் நிர்பந்தத்திற்குள்ளாகி யஸீது பின் அபூ சுஃப்யான் அவர்களை அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் சயீது பின் ஸைது அவர்கள் மீண்டும் போரில் கலந்து கொண்டார்கள்.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 138 ஹஸ்ரத் சயீது பின் ஸைது (ரலி) – தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது & குலாம் பாரி ஸைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 164)

ஹஸ்ரத் சயீது பின் ஸைது அவர்களுக்கு முன்னால் எவ்வளவோ புரட்சிகள் வெடித்தன. 20ற்கும் மேற்பட்ட உட்பூசல்கள் ஏற்பட்டன. ஆனால் அவர்கள் தனது தூய்மை மற்றும் இறையச்சத்தின் காரணமாக அந்த சண்டையிலிருந்து

எப்பொழுதுமே விலகி இருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் சயீது பின் ஸைது அவர்கள் ஒருவரை குறித்து ஏதேனும் கருத்து கொண்டிருந்தால் அதை சுதந்திரமாக வெளிப்படுத்துவதிலும் தாமதிக்க மாட்டார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் ஷஹீதாக்கப்பட்டபோது ஹஸ்ரத் சயீது பின் ஸைது அவர்கள் கூஃபா பள்ளிவாசலில் மக்களைப் பார்த்து, நீங்கள் உஸ்மானுடன் செய்த செயலினால் இந்த உஹது மலை நடுக்கம் கண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று கூறி வந்துள்ளார்கள். (சீரத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 139)

அவ்வாறே ஒரு நாள் கூஃபாவுடைய ஜாமிஆ பள்ளிவாசலில் முகைரா பின் ஷுஃபா என்பவர் ஹஸ்ரத் அலி அவர்களுடைய கண்ணியத்திற்கு எதிராக தவறாக பேசினார்கள். இதைக்கண்ட ஹஸ்ரத் சயீது பின் ஸைது அவர்கள் அந்நபரிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்து நபர்கள் சொர்க்கம் செல்வார்கள் என்று கூறியுள்ளார்கள். அதில் ஹஸ்ரத் அலி அவர்களும் ஒருவர் ஆவார்கள் என்று கூறினார்கள்.

(குலாம் பாரி ஸைஃப் அவர்கள் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 165)

ஹஸ்ரத் சயீது பின் ஸைது (ரலி) அவர்கள் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்பட்ட மனிதராக இருந்தாக்ரள். ஒரு முறை அவர் மீது நில அபகரிப்பு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. அதன் விபரம் என்னவென்றால், ஹஸ்ரத் சயீது பின் ஸைது அவர்களுடைய நிலத்தை ஒட்டியுள்ள நிலம் உர்வா பின்த் உவைஸ் என்ற பெண்மணியினுடைய நிலமாக இருந்தது. அவர்கள் முஆவிய்யா அவர்களின் சார்பாக மதீனாவில் கவர்னராக நியமிக்கப்பட்ட மர்வான் பின் ஹகம் என்பவரிடம் ஒரு புகார் அளித்தார்.

அதாவது சயீது அவர்கள் அநீதியுடன் எனது நிலத்தை அபகரித்து விட்டார் என்று புகார் அளித்தார். மர்வான் அவர்கள் விசாரிப்பதற்காக ஒருவரை நியமித்தார்கள். ஹஸ்ரத் சயீது அவர்கள் அவரிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய இந்தக் கூற்றை கேட்ட பிறகும் நான் அநீதியிழைப்பேன் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவர் அநீதியுடன் ஒரு ஜாண் அளவு நிலத்தை அபகரித்தாலும் கியாமத்தின்போது 7 பூமியும் அவருடைய கழுத்தில் விலங்காக போடப்படும்.

அதன் பிறகு அவர்கள், என் இறைவா! உர்வா பொய் கூறுபவளாக இருந்தால் அவளுடைய பார்வை சென்று, அவளுடைய வீட்டுக்கிணறு அவளுக்கு கல்லறையாக மாறாத வரை அவளுக்கு மரணத்தை தராதே என்று கூறினார்கள்.

அதன்பிறகு இந்த சம்பவம் கூறப்பட்டுள்ளது. உர்வா முதலில் கண் பார்வை இழந்தார். பிறகு ஒரு நாள் நடந்து கொண்டிருக்கும்போது தனது வீட்டில் உள்ள கிணற்றில் விழுந்து இறந்து விட்டார். அதன் பிறகு மதீனாவை சார்ந்தவர்களிடம் இந்த சொற்றொடரை கூறக்கூடிய வழக்கம் ஏற்பட்டு விட்டது. அதாவது உர்வாவை குருடாக்கியதுபோன்று அல்லாஹ் உம்மையும் குருடாக்குவானாக என்று கூறி வந்தார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 477 சயீது பின் ஸைது – 2003 ஆம் ஆண்டு லபனானிலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & குலாம் பாரி ஸைஃப் அவர்கள் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 164,165)

ஹஸ்த் சயீது பின் ஸைத் அவர்கள் ஹிஜ்ரி 50 அல்லது 51 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 70 வயதில் வெள்ளிக்கிழமையன்று மரணமடைந்தார்கள். மரணத்தின்போது அவர்களது வயது 70 ஐ விட அதிகமாக இருந்தது என்றும் சில அறிவிப்புகளில் கூறப்படுகிறது.

மதீனாவைச் சுற்றியுள்ள இடமான அக்கீக் என்ற இடம் அவர்கள் நிரந்தரமாக தங்கக்கூடிய வீடாக இருந்தது. அக்கீக் என்ற பெயருடைய பல பள்ளத்தாக்குகள் அரபு நாட்டில் இருந்தன. அதில் மிக முக்கியமானது மதீனாவினுடைய பள்ளத்தாக்கு ஆகும். இது மதீனாவின் தென்மேற்கு பகுதியிலிருந்து வடகிழக்கு பகுதி வரை பரந்து காணப்பட்டது. அதில் மதீனாவின் அனைத்து பள்ளத்தாக்குகளும் வந்து ஒன்றிணைந்திருந்தன.

எவ்வாறிருப்பினும், அப்துல்லாஹ் பின் உமர் அவர்கள் ஜுமுஆவுக்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் சயீது அவர்களுடைய மரணச் செய்தி கிடைத்தபோது அவர்கள் ஜுமுஆவுக்காக செல்லவில்லை. மாறாக, உடனேயே அக்கீக்கை நோக்கி விரைந்தார்கள். ஹஸ்ரத் சஅது பின் அபீ வக்காஸ் அவர்கள் குளிப்பாட்டினார்கள். அன்னாருடைய புனித உடல் மக்களின் தோள்களில் சுமக்கப்பட்டு மதீனாவுக்கு கொண்டு வரப்பட்டது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் அவர்கள் ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். மதீனாவில் அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 138 ஹஸ்ரத் சயீது பின் ஸைது (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 478 சயீது பின் ஸைது (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இன்னொரு அறிவிப்பின்படி, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் அவர்கள் இவர்களுடைய மரணச் செய்தியை அறிந்தபோது அவர்கள் ஜுமுஆவுக்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஜுமுஆவுக்குச் செல்லவில்லை. அவர்களை பார்க்கச் சென்றார்கள். மேலும் அவர்களை குளிப்பாட்டினார்கள். அவர்களுக்கு நறுமணம் பூசினார்கள். மேலும் அவர்களுடைய ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள்.

ஆயிஷா பின்த் சஅது அவர்களுடைய அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. அதாவது ஹஸ்ரத் சயீது பின் ஸைது அவர்களை ஹஸ்ரத் சஅது பின் அபீ வக்காஸ் அவர்கள் குளிப்பாட்டினார்கள். அவருக்கு நறுமணம் பூசினார்கள். பிறகு அவர்கள் வீட்டிற்கு வந்து அவர்களும் குளித்தார்கள். வீட்டைவிட்டு வெளியேறும்போது ஹஸ்ரத் சயீது பின் ஸைது அவர்களை குளிப்பாட்டியதன் காரணமாக நான் குளிக்கவில்லை. மாறாக வெப்பத்தின் காரணமாக நான் குளித்தேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் சயீது பின் ஸைது அவர்களுடைய ஜனாஸா தொழுகையை ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் அவர்கள் தொழ வைத்தார்கள். ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் மற்றும் அப்துல்லாஹ் பின் உமர் ஆகிய இருவரும் கபரில் இறங்கினார்கள்.

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

அதாவது அந்த மண்ணறையில் உடலை வைப்பதற்காக இறங்கினார்கள் என்று கூறப்படுகிறது.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 138 ஹஸ்ரத் சயீது பின் ஸைது (ரலி) – கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ மஃரூஃப்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 478 சயீது பின் ஸைது (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சயீது பின் ஸைது அவர்கள் பல்வேறு காலகட்டங்களில் பத்து திருமணம் செய்திருந்தார்கள். அந்த மனைவிகள் மூலமாக அவர்களுக்கு 13 மகன்களும், 19 பெண் பிள்ளைகளும் பிறந்தன.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 292 சயீது பின் ஸைது – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & சீரத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 138 ஹஸ்ரத் சயீது பின் ஸைது (ரலி) – கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

இனி அடுத்த சஹாபியைப் பற்றி சுருக்கமாக எடுத்துரைப்பேன். அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் ஆகும். அறியாமைக் காலத்தில் இவர்களுடைய பெயர் அப்தே அம்ர் என்றிருந்தது. இன்னொரு அறிவிப்பின்படி அப்துல் கஅபா என்றிருந்தது. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்துல்லாஹ் என்ற பெயரை மாற்றி வைத்தார்கள். இவர்கள் பனூ ஸுஹ்ரா பின் கலாப் என்ற கோத்திரத்தைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 92 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஸஹ்லா பின்த் ஆஸிம் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் வெள்ளை நிறம் கொண்டவர்களாகவும், அழகிய கண்களை கொண்டவராகவும், நீளமான கண் இமையை கொண்டவர்களாகவும், நீண்ட மூக்கை உடையவர்களாகவும் இருந்தார்கள். முன்னாலுள்ள பல் வரிசையில் மேற்பகுதியில் உள்ள பல் நீண்டதாகவும் இருந்தது. காதுகளில் கீழே வரை முடிகள் இருக்கும். நீண்ட கழுத்து உடையவர்; உறுதியான உள்ளங்கைகளை உடையவர்; தடித்த விரல்களை கொண்டவர்.

(அல் இஸ்திஆப் தொகுதி 2 பக்கம் 847 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) – பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

இப்ராஹீம் பின் சஅது அவர்கள் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள் உயரமான மனிதராகவும், சிகப்பு கலந்த வெள்ளை நிறம் உடையவராகவும், வெண்மையான தேகத்தைக் கொண்டவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் தலை முடிக்கு சாயம் பூசுவது கிடையாது. அவர்கள் கால் ஊனமுற்றவர் என்றும் கூறப்படுகிறது. ஏனெனில் உஹது போரில் இந்த ஊனம் ஏற்பட்டது. உஹது மைதானத்தில் சத்திய வழியில் அவர்கள் காயமுற்றார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 292 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தமது வாழ்நாளிலேயே சொர்க்கத்திற்கான நற்செய்தி கிடைக்கப்பெற்ற 10 நபர்களில் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களும் ஒருவர் ஆவார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் தமக்கு பிறகு கிலாஃபத்தை தேர்ந்தெடுப்பதற்காக நியமித்த ஆறு நபர்களைக் கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் இவர்களும் ஒருவராக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது மரணத்தின்போது இவர்களுடன் திருப்திக் கொண்டிருந்தார்கள் என்றும் ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறினார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஹுஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 290 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

யானை வருடத்திற்கு பத்து வருடங்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் பிறந்தார்கள். அறியாமைக் காலத்திலேயே மதுவை தம்மீது ஹராமாக்கிக் கொண்ட மிகச் சிலரில் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களும் அடங்குவார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட முதல் எட்டு நபர்களில் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களும் ஒருவர் ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாரே அர்கமை தலைமையகமாக மாற்றுவதற்கு முன்னே ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் தப்லீகின் விளைவால் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டார்கள். அபிஸீனியாவை நோக்கி செய்யப்பட்ட இரண்டு ஹிஜ்ரத்திலும் இவர்கள் பங்கு பெற்றார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 92 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & ரோஷன் சிதாரே பக்கம் 103,104)

புகாரியில் ஓர் அறிவிப்பு இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் மதீனா வந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சஅத் பின் ரபீஃ அவர்களுடன் எனக்கு சகோதர பந்தத்தை ஏற்படுத்தினார்கள். சஅது பின் ரபீஃ அவர்கள் என்னிடம், நான் அன்ஸார்களிலேயே அதிக செல்வம் உடையவராக இருக்கிறேன் என்று கூறினார்கள்.

இந்த சம்பவம் சஅது பின் ரபீஃ அவர்களைப் பற்றிய குறிப்பில் ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. ஆயினும் இங்கும் நான் கூறுகிறேன். சஅது பின் ரபீஃ அவர்கள் கூறினார்கள். எனது செல்வத்தை இரண்டாக பிரித்து அதில் ஒரு பங்கை உங்களுக்கு நான் கொடுத்து விடுகிறேன்; எனக்கு இரண்டு மனைவிகள் உள்ளன. அவர்களில் நீங்கள் யாரை விரும்புகின்றீர்களோ அவருக்கு நான் விவகாரத்து கொடுத்து விடுகிறேன். இத்தா கழிந்த பிறகு நீங்கள் அவரை திருமணம் செய்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

இதைக்கேட்ட ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் அவரிடம், அல்லாஹ் உங்களது குடும்பத்திலும், செல்வத்திலும் பரக்கத்தை வழங்குவானாக. எனக்கு இவற்றின் தேவை கிடையாது. இங்கு வியாபாரம் நடக்கக்கூடிய கடைவீதி ஏதாவது இருநதால் கூறுங்கள் என்று கேட்டார்கள். அவர்கள் கைநிகா கடைவீதி பற்றி கூறினார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் அங்கு சென்று வியாபாரம் செய்தார்கள். பாலாடைக் கட்டியையும், நெய்யையும் இலாபமாக சம்பாதித்து சஅது பின் ரபீஃ அவர்களுடைய வீட்டிற்கு அதைக் கொண்டு வந்தார்கள். பிறகு இவ்வாறு ஒவ்வொரு

**திருக்குர்ஆனிலிருந்து...**

நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். மேலும் உண்மையாளர்களுடன் இணைந்து கொள்ளுங்கள். (9:119)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

நாளும் அவர்கள் கடைவீதிக்கு சென்று வியாபாரம் செய்வார்கள். இலாபம் சம்பாதித்துக் கொண்டு வருவார்கள்.

கொஞ்சம் காலம்தான் கழிந்திருக்கும். ஒரு நாள் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களின் மீது வாசனைத் திரவியத்தின் அடையாளம் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம் நீங்கள் திருமணம் செய்து விட்டீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள், நான் அன்ஸாரிப் பெண் ஒருவரை மணந்தேன் என்று பதிலளித்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள், அவளுக்கு (மஹராக) என்ன கொடுத்தீர்கள்? என்று கேட்க, ஒரு பேரீச்சங்கொட்டையின் எடையளவு தங்கத்தை என்று பதிலளித்தார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் ஓர் ஆட்டையாவது (அறுத்து) வலீமா – மண விருந்து கொடுங்கள் என்று கூறினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி... ஹதீஸ் எண் 2048, 2049)

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஒரு கல்லை எடுத்து அதன் கீழே தங்கம் அல்லது வெள்ளி கிடைக்கும் என்று எண்ணினால் அவ்வாறு எனக்கு கிடைத்து வந்தது. அவ்வாறான நிலையையும் நான் கண்டுள்ளேன். அதாவது அல்லாஹ் வியாபாரத்தில் அந்த அளவு அருளை வழங்கியிருந்தான்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 95 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் பத்ர், உஹது போன்ற அனைத்துப் போர்களிலும் நாயகம் (ஸல்) அவர்களுடன் பங்கு பெற்றுள்ளார்கள். பத்ர் போர் சம்பவத்தை குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் கூறுகின்றார்கள்: பத்ர் போரின்போது வரிசையில் நான் நின்று கொண்டிருந்தேன். எனது வலப்புறமும் இடப்புறமும் நான் பார்த்தேன். சிறிய வயதுடைய இரண்டு அன்ஸாரி சிறுவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். இவர்களை விட இளைஞரான திடகாத்திரமான மக்களிடையே நான் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நான் நினைத்துக் கொண்டேன்.

அப்போது அந்த இரண்டு சிறுவர்களில் ஒருவன் தனது கையைக் கொண்டு என்னை பிடித்து அழுத்தியவாறு, தந்தையின் சகோதரரே! உங்களுக்கு அபுஜஹீல் தெரியுமா? என்று கேட்டான். நான் அந்த சிறுவனிடம் உனக்கு என்ன வேலை என்று கேட்டேன். அதற்கு அவன், அபுஜஹீல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏசிப்பேசி வந்துள்ளதாக நான் கேள்விப்பட்டேன். ஆகவே எவனுடைய கையில் என் உயிர் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! நான் அந்த அபுஜஹீலை கண்டால் எங்கள் இருவருள் எவருடைய முடிவு தீர்மானிக்கப்பட்டு விட்டதோ அவர் மாண்டு போகாத வரை எனது கண்கள் அவனை விட்டு அகலாது என்று கூறினான். இதைக்கேட்டு எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் கூறுகின்றார்கள்: பிறகு இன்னொரு சிறுவனும் தமது கைகளை அழுத்தியவாறு அவ்வாறே என்னிடம் கேட்டான். கொஞ்சம் நேரம்தான் கழிந்திருக்கும். மக்களிடையே அபுஜஹில் சுற்றி வருவதை நான் கண்டேன். நான் அவர்கள் இருவரிடமும், பாருங்கள்! நீங்கள் கேட்ட நபர் அவன்தான் என்று கூறினேன். இதைக்கேட்ட அவ்விருவரும் விரைவாக தமது வாளை ஏந்தியவாறு அந்த பகுதியை நோக்கி விரைந்தார்கள். மேலும் அவனை எந்த அளவு தாக்கினார்கள் என்றால் அவனை கொன்று விட்டார்கள். பிறகு அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து செய்தியைக் கூறினார்கள்.

உங்களில் யார் அவனைக் கொன்றது என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். இருவரும் தாம் கொன்றதாக கூறினார்கள். நீங்கள் இருவரும் உங்களுடைய வாளை சுத்தம் செய்து விட்டீர்களா? என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர்கள் இல்லை என்று பதிலளித்தார்கள். நாயகம் (ஸல்) அவர்கள் அந்த இருவரின் வாளை வாங்கி பார்த்தார்கள். பிறகு நீங்கள் இருவருமே அவனை கொன்றுள்ளீர்கள் என்று கூறினார்கள். போர் செல்வம் முஆஸ் பின் அம்ர் பின் ஜமூ–க்கும் கிடைக்கும் என்று கூறினார்கள். அந்த இருவரின் பெயர் முஆஸ் ஆக இருந்தது. முஆஸ் பின் அஃப்ரா மற்றும் முஆஸ் பின் அம்ர் பின் ஜமூஹ் ஆகும். இது புகாரியின் அறிப்பாகும்.

அபுஜஹில் கொல்லப்பட்ட சம்பவம் பற்றிய விளக்கம் இதற்கு முன்பும் கூறுப்பட்டுவிட்டது. மீண்டும்ட அதை நான் கூறுகிறேன். சில அறிவிப்புகளில் அஃப்ரா என்ற நபருடைய இரு மகன்கள் முஅவ்விஸ் மற்றும் முஆஸ் ஆகியோர் அபுஜஹிலை மரணத்திற்கு அருகில் கொண்டு சேர்த்து விட்டார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது அவர்கள் பிறகு அவனுடைய தலையை உடலை விட்டு வெட்டி துண்டாக்கினார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

இமாம் இப்னு ஹஜர் அவர்கள், முஆஸ் பின் அம்ர் மற்றும் முஆஸ் பின் அஃப்ராவுக்கு பிறகு முஅவ்விஸ் பின் அஃப்ராவும் அவனை தாக்கியதாக தமது ஐயத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள். இதுவும் ஷரஹ் புகாரியில் ஃபத்ஹுல் பாரியில் எழுதப்பட்டுள்ளது.

(ஸஹீஹுல் புகாரி... ஹதீஸ் எண் 3141, கிதாபுல் மகாஸி பாப் கத்ல் அபீ ஜஹ்ல் ஹதீஸ் எண் 3961, 3962 & ஃபத்ஹுல் பாரி தொகுதி 7 பக்கம் 295,296)

இந்த சம்பவத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

மக்காவில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் தலைவரான அபுஜஹில் நிராகரிப்பவர்களின் தளபதியாக இருந்தான். போரின்போது அவன் படையை சீரமைத்துக் கொணடிருந்தான். அப்போது அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் போன்ற அனுபவனுமுள்ள தளபதி தனது வலப்பக்கமும் இடப்பக்கமும் 15 வயதுடைய இரண்டு அன்ஸாரி சிறுவர்கள் நிற்பதை பார்த்தார்கள். அவர்களைப் பார்த்து விட்டு இன்று எனது உள்ளத்தின் ஏக்கத்தை வெளிப்படுத்தக்கூடிய வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை. துர்பாக்கியம் என்னவென்றால், எனது அருகில் அனுபவமற்ற சிறுவர்கள் இருக்கின்றார்கள். அந்த சிறுவர்கள் கூட அன்ஸாரி சிறுவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு போரைப் பற்றிய எந்த அனுபவமும் கிடையாது என்று எண்ணினார்கள்.

அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இதே சிந்தனையில் இருந்தபோது எனது வலப்பக்கம் கைமுட்டைக்

## திருக்குர்ஆனிலிருந்து...

தனது அடித்தளத்தை இறையச்சம் மற்றும் இறை திருப்தியின் அடிப்படையில் அமைத்துள்ளவன் சிறந்தவனா? அல்லது தன் அடித்தளத்தை நரக நெருப்பில் சரிந்து விழக்கூடிய வழுக்கலான விளிம்பில் அமைத்தவ(ன் சிறந்தவ)னா? மேலும் அல்லாஹ் அநீதியிழைக்கும் சமுதாயத்தினர்க்கு வழிகாட்டுவதில்லை. (9:109)

A.Basheer Ahmad, Melapalayam

கொண்டு இடிக்கப்பட்டது. வலப்பக்கத்தில் உள்ள சிறுவன் ஏதோ கூற விரும்புகிறான் என்று நான் உணர்ந்து கொண்டேன். நான் அவன் பக்கம் திரும்பினேன். அவன் என்னைப் பார்த்து, தந்தையின் சகோதரரே! கொஞ்சம் குனிந்து எனது விஷயத்தை கேளுங்கள். நான் உங்களது காதில் இந்த விஷயத்தை கூற விரும்புகின்றேன். என்னுடைய மற்றொரு தோழன் இந்த விஷயத்தை கேட்டுவிடக்கூடாது என்றான்.

நான் அவனுடைய விஷயத்தை கேட்பதற்காக அவன் பக்கம் குனிந்தேன். அவன் என்னிடம் தந்தையின் சகோதரரே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த அளவு துன்பம் கொடுத்த அபுஜஹில் யார்? அவனைக் கொன்றுவிட எனது உள்ளம் நாடுகிறது என்று கூறினான்.

அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் கூறுகின்றார்கள்: அவன் தனது விஷயத்தைக் கூறி முடிக்க கூட இல்லை. எனது இடப்பக்கத்தில் உள்ள சிறுவனை பார்த்தேன். இடப்பக்கத்தில் உள்ள சிறுவனும் அதையேதான் கேட்டான். தந்தையின் சகோதரரே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த அளவு துன்பம் கொடுத்த அபுஜஹில் யார்? அவனைக் கொன்றுவிட எனது உள்ளம் நாடுகிறது என்று கூறினான்.

அனுபவமிக்க படைவீரனாக இருந்தும்கூட எனது உள்ளத்தில் இந்த சிந்தனை வரவில்லை. அதாவது அந்தப் படையினுடைய கமாண்டராக இருந்த, அனுபவமிக்க போர் வீரர்களின் வளையத்திற்குள் நிற்கக்கூடிய அவனை கொல்ல முடியும் என்ற எண்ணம் எனக்கு தோன்றவில்லை. நான் எனது விரலை உயர்த்தி ஒரே நேரத்தில் அந்த இரண்டு சிறுவர்களிடமும், அதோ அங்கு போர் கவசம் அணிந்து தன்னை மறைத்துக் கொண்டு நிற்கக்கூடிய அந்த மனிதனுக்கு முன்னால் உறுதியான வீரமிக்க படைத்தளபதிகள் உருவிய வாளுடன் நிற்கிறார்களே அவன்தான் அபுஜஹில் என்றேன். நான் இவ்வாறு கூறியதற்கான காரணம் என்னவென்றால், அனுபவமற்ற உங்களைப்போன்ற சிறுவர்களால் இது சாத்தியமற்றது என்று கூற விரும்பினேன்.

அப்துர் ரஹ்மான் கூறுகின்றார்கள்: உயர்த்திய விரல் கீழே வரக்கூட இல்லை. பருந்து பறவையின் மீது தாக்குதல் தொடுப்பதுபோன்று அந்த இரண்டு அன்ஸாரி சிறுவர்களும் நிராகரிப்பாளர்களின் வரிசைகளை கிழித்தவாறு அபுஜஹிலை நோக்கி ஓடினார்கள். அபுஜஹிலுக்கு முன்னால் வீரமிக்க அனுபவமிக்க அவனது மகன் இக்ரிமா நின்றுகொண்டிருந்தார். ஆனால் இந்த அன்ஸாரி சிறுவர்கள் எந்த அளவு விரைவாக சென்றார்கள் என்றால் இவர்கள் எந்த நோக்கத்திற்காக முன்னேறுகிறார்கள் என்று யாருமே சிந்திக்க முடியவில்லை. பார்த்துக் கொண்டிருக்கும்போதே அபுஜஹிலின் மீது தாக்குதல் நடத்த நிராகரிப்பாளர்களின் வரிசைகளை கிழித்தவாறு பாதுகாவலர்கள் வரை சென்றடைந்து விட்டார்கள்.

அந்த பாதுகாவலர்கள் உருவிய வாளை ஏந்திக்கொண்டு பாதுகாப்பு பணியில் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் உரிய நேரத்தில் தமது வாளை வீச முடியாமல் போய்விட்டது. அது ஓர் அன்ஸாரி சிறுவனுடைய புஜத்தை வெட்டியது. ஆனால் எவர்கள் உயிரை கொடுப்பதை எளிதாக நினைக்கின்றார்களோ ஒரு புஜம் வெட்டப்படுவதால் அவர்களை எவ்வாறு தடுக்க முடியும்! மலையின் மேலிருந்து கற்கள் விழுவது போன்று அந்த இரண்டு சிறுவர்களும் பாதுகாவலர்கள் மீது அழுத்தத்தை கொடுத்து அபுஜஹிலின் மீது பாய்ந்தார்கள். போர் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே நிராகரிப்பவர்களின் கமாண்டரை வீழ்த்தி விட்டார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது அவர்கள் கூறுகின்றார்கள்: போரின் இறுதியில் அபுஜஹில் தனது உயிரை விட்டுக் கொண்டிருந்த நிலையில் நான் அங்கு சென்றேன். நான் அவனை பார்த்து எப்படி இருக்கிறாய்? என்று கேட்டேன். அதற்கு அவன், நான் இறந்து கொண்டிருக்கின்றேன். மிகவும் ஏக்கத்துடன் இறந்து கொண்டிருக்கிறேன். ஏனென்றால் இறப்பது பெரிய விஷயம் கிடையாது. ஆனால் பரிதாபம் என்னவென்றால், எனது உள்ளத்தின் ஏக்கத்தை வெளிப்படுத்துவதற்கு முன்பே அன்ஸாரிகளின் இரண்டு சிறுவர்கள் என்னை வீழ்த்தி விட்டார்கள்.

மக்காவாசிகள் அன்ஸாரிகளை மிகவும் ஏளனமாக கருதி வந்தனர். ஆகவே அவன் மிகவும் பரிதாபத்தோடு அதைக் கூறினான். இரண்டு அன்ஸாரி சிறுவர்கள் என்னை கொன்று விட்டார்களே என்ற ஏக்கத்தை உள்ளத்தில் ஏந்தியவாறு நான் மரணிக்கின்றேன் என்று கூறினான்.

பிறகு அவன் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் அவர்களைப் பார்த்து, நான் கடும் வேதனையில் இருக்கின்றேன். என்மீது கருணை காட்டுங்கள். ஒரே வாள் வீச்சால் என்னை கொன்று விடுங்கள். வெட்டி வீழ்த்தும்போது எனது தலை உயரமாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் தளபதியினுடைய அடையாளம் அவனது கழுத்து நீளமாக வெட்டப்பட்டிருக்க வேண்டும் என்று கூறினான்.

அதற்கு அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் அவர்கள், அந்தத் துன்பத்திலிருந்து காப்பாற்றும்படி கேட்ட அவனுடைய ஒரு விஷயத்தை ஒப்புக் கொண்டு அவனை கொன்று விட்டார்கள். ஆனால் இறக்கும்போது கழுத்தை நீளமாக வெட்டும்படி கூறிய அவனது அந்த ஏக்கத்தை அவர்கள் பூர்த்தி செய்யவில்லை. அவனது கழுத்தை குட்டையாக வெட்டினார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 8 பக்கம் 100, 101)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீதான நேசம், அன்பு குழந்தைகளிடத்திலும் எந்தளவு இருந்தது என்றும், எவ்வாறு அன்னாருடைய எதிரிகளை பழிவாங்க அவர்கள் விரும்பினார்கள் என்பது குறித்த தலைப்பில் தியாகத்தைப் பற்றி குறிப்பிடும்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தைக் குறிப்பிடுகிறார்கள்.

இதற்கு முன்பும் ஓரிரு முறை இந்த சம்பவம் கூறப்பட்டு விட்டது. எவ்வாறிருப்பினும் இந்த தியாகங்கள்தான் இந்த நேசம்தான் இந்த அன்புதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அந்த அனைவருக்கும் இருந்தது. இதன் காரணமாக அவர்கள் தமது உயிரை பொருட்படுத்தவில்லை. அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களைப் பற்றி மீதமுள்ள விஷயங்களை இன்ஷா அல்லாஹ் இனி (வரக்கூடிய காலத்தில்) கூறுவேன்.

......☆......☆......☆......

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் பாதையில் அவர்கள் செய்கின்ற சிறிய அல்லது பெரிய செலவும், ஏதாவதொரு பள்ளத்தாக்கை அவர்கள் கடந்து செல்வதும் (அவர்களின் நற்செயல்களைச் சேர்ந்ததாக) எழுதப்படுகின்றன. அல்லாஹ் அவர்களின் செயல்களுக்கு (எல்லாவற்றையும் விட) மிக உயர்வான பிரதிபலனை வழங்குகிறான். (9:121)

M.Y. Shahul Hameed, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 16 July 2020 Issue No. 29

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.500/- (Per Issue Rs. 9/-) (WEIGHT - 20-50 gms/issue)

# ஸய்யதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஐரோப்பா சுற்றுப் பயணம் (செப்டம்பர் & அக்டோபர் 2019)

♦ ஹுஸூர் அவர்கள் தேசிய தப்லீக் செயலரிடம் தப்லீக் தொடர்பான திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பாக கேட்டறிந்தார்கள்.

தப்லீக் செயலர் கூறினார்கள்: நாங்கள் புதிய தப்லீக் திட்டத்தை வகுத்துள்ளோம். ஹுஸூர் அவர்கள் தற்போது வழங்கும் வழிகாட்டல்களையும் அத்துடன் இணைத்துக் கொள்வோம்.

பிறகு ஹுஸூர் அவர்கள் கேட்டதற்கிணங்க, பைஅத் அறிக்கை தொடர்பாக ஜெனரல் செகரட்டரி சாஹிப் கூறினார்கள்: இந்த வருடம் பைஅத்தின் எண்ணிக்கை 7 ஆகும்.

அதற்கு ஹுஸூர் அவர்கள், உள்ளூர் மக்களும் பைஅத் செய்திருக்கின்றார்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், ஆம்! உள்ளூர் மக்களும் பைஅத் செய்துள்ளார்கள். இரண்டு இளைஞர்கள் ஆவர். அவர்கள் மாநாட்டிற்கும் வந்துள்ளார்கள். மேலும் டியூட்டியும் கொடுக்கின்றார்கள் என்று கூறினார்கள்.

♦ தேசிய விருந்து உபசரிப்பு செயலரிடம் ஹுஸூர் அவர்கள் கேட்டார்கள்: மாநாட்டில் விருந்தினர்களின் உணவிற்கான ஏற்பாடு எவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது?

அதற்கு அவர்கள், என்னிடம்தான் என்று கூறினார்கள்.

அதற்கு ஹுஸூர் அவர்கள், உங்களது எதிர்பார்ப்பை விட அதிகமான விருந்தினர்கள் வந்திருக்கின்றனர். அனைவருக்கும் உணவிற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததா? என்று கேட்டார்கள்.

அதற்கு அவர்கள், நாங்கள் ஏற்பாடுகளை செய்திருந்தோம். அனைத்து விருந்தினர்களுக்கும் உணவிற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. உருளைக் கிழங்கு, மாமிசம், பருப்பு, ரொட்டி மட்டுமின்றி சோறும் ஏற்பாடு செய்யப்பட்டு கொடுக்கப்பட்டது என்று கூறினார்கள்.

♦ தேசிய தஃலீமுல் குர்ஆன் வ வக்ஃபே ஆரிஸி செயலர் தனது அறிக்கையை எடுத்துக் கூறியவாறு கூறினார்கள்: வக்ஃபே ஆர்ஸி துறையின் கீழ் சிறப்பான பணிகள் எதுவும் நடைபெறவில்லை.

அதற்கு ஹுஸூர் அவர்கள், வக்ஃபே ஆர்ஸி செய்வதற்காக நேரத்தை ஒதுக்குமாறு முதலில் உங்களது செயற்குழு உறுப்பினர்களிடம் கூறுங்கள். பிறகு குத்தாம், அன்ஸார், லஜ்னா ஆகியோரின் செயற்குழு உறுப்பினர்களுடன் வக்ஃபே ஆர்ஸி செய்யுமாறு கூறுங்கள். இதற்குப் பிறகு உங்களது உள்ளூர் ஜமாஅத்துகளிலுள்ள செயற்குழு உறுப்பினர்களுடனும், கிளை அமைப்புகளின் செயற்குழு உறுப்பினர்களுடன் எடுத்துக் கூறுங்கள். இவ்வாறு எல்லா மட்டத்திலுமுள்ள செயற்குழு உறுப்பினர்கள் செயல் துடிப்புள்ளவர்களாக ஆகிவிட்டால் பிறகு எல்லாம் சரியாகி விடும்.

வக்ஃப் ஆர்ஸி செய்வதற்கு Spain தான் செல்ல வேண்டும் என்பது அவசியமல்ல. மாறாக ஹாலந்திலும் வக்ஃபே ஆர்ஸி செய்ய முடியும். குழந்தைகளுக்கு திருக்குர்ஆன் மற்றும் மார்க்க அறிவைக் கற்றுக் கொடுப்பது ஆகிய வகுப்புகளை நடத்துங்கள். உங்களது செயற்குழுவிடமிருந்து அறிக்கை பெறுங்கள்.

பிறகு உங்களது செயற்குழுவைச் சார்ந்தவர்கள் எத்தனை நபர்கள் 15 நாட்கள் வக்ஃபே ஆர்ஸி செய்துள்ளார்கள் என்பது பற்றி எனக்கு அறிக்கை அனுப்புகள். வக்ஃபே ஆர்ஸி செய்வதற்காக நீங்கள் அனைத்து மஜ்லிஸ்களிலிருந்தும் 75 சதவிகிதம் இலக்கை பெற்று விட்டால் பிறகு நீங்கள் 75 சதவிகிதம் மக்களை இணைத்து விட்டீர்கள் என்பதே அதன் பொருளாகும். இவ்வாறு பணிகளை ஆரம்பம் செய்யுங்கள்.

♦ தஹ்ரீகே ஜதீதின் தேசிய செயலர் அவர்களிடம் ஹுஸூர் அவர்கள் கேட்டறிந்தார்கள். அதற்கு அவர், எங்களது சந்தாக்களில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்றது. நாங்கள் இதற்காக ஜமாஅத்துகளுக்கு சுற்றுப்பணமும் மேற்கொள்கின்றோம் என்று கூறினார்.

அதற்கு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: செகரட்டரி மால் அவர்களுடன் அமர்ந்து சந்தாவின் தரம் மற்றும் சந்தா செலுத்தக்கூடியவர்களின் தகுதி ஆகியவற்றை ஆய்வு மேற்கொள்ளலாம். பிறகு இலக்கையும் நிர்ணயிக்கலாம். அதிகம் அழுத்தம் கொடுக்க வேண்டாம். மேலும் அதிகமாக விட்டு விடவும் கூடாது.

♦ வக்ஃபே ஜதீதின் தேசிய செயலர் அவர்களுக்கு அத்ஃபால் சந்தா தொடர்பாக வழிகாட்டியவாறு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

அத்ஃபால்களின் சந்தாவை அத்ஃபால்களின் வசமே ஒப்படைக்கவும். ஒரு சந்தாவையாவது அவர்களிடம் ஒப்படையுங்கள். மேலும் குத்தாம்களுக்கும் இலக்கை நிர்ணயுங்கள். அதாவது அத்ஃபால்களின் எண்ணிக்கை இவ்வளவு ஆகும். எனவே இவ்வளவு இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு பர்கர் எவ்வளவு தொகைக்கு கிடைக்கின்றதோ குறைந்தது அந்த அளவுக்கு இலக்கு இருக்க வேண்டும். ஹுஸூர் அவர்களிடம் கூறப்பட்டது. அதாவது இங்கு 7 முதல் 12 வயதுடைய சிறுவனிடமிருந்து வக்ஃபே ஜதீது சந்தா வசூல் செய்யப்பட வேண்டும் என்று கருதப்படுகிறது.

அதற்கு ஹுஸூர் அவர்கள், இது சரியல்ல. 7 முதல் 15 வயதுடைய சிறுவர்கள் அத்ஃபால்களைச் சார்ந்தவர்கள் ஆவர். 12 வயது வரை அல்ல. மாறாக, 15 வரை ஆகும். அத்ஃபால்களின் வயது 15 வரை ஆகும்.

(உருது பத்ர் 14 நவம்பர் 2019 – தொடரும்...)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad